RECEIVED 1989-6-30 Periodic
1989-6-30 Periodicals Library

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர் 31 | ஆனி 16 | துல்ஹஜ்ஜு 25 | இதழ் 42
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 30-06-1989

## அமைதிப்படை விவகாரம்: ஜனாதிபதி 'பிரேமா' உறுதியாக இருக்கிறார்"

(கொழும்பு)

''எத்தகைய தடைகளையும் முட்டுக்கட்டைகளையும் எதிர் நோக்க வேண்டி இருந்தாலும் இந்திய அமைதிப்படை இலங் கையிலிருந்து வாபஸ் பெற வேண்டும் என்ற கொள் கையை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி திட சங்கல்பம் பூண்டுள்ளார்''.

இவ்வாறு தகவல் துறை

(8-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் ஹர்த்தால்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் நேற்று ஹர்த்தால் அனுஷ் டிக்கப்பட்டது.

வாகனப் போக்குவரத்து நடைபெறவில்லை. வர்த்தகநிலை யங்கள் எதுவும் இயங்கவில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கில் யுத்த நிறுத்தம்

# இந்தியாவிடம் கோரிக்கை

## ராஜீவுக்கு பிரேமா கடிதம்?

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கிலுள்ள இந்திய அமைதிப்படை உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யவேண்டுமென்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேம தாசா இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது குறித்து இந்தியப்பிர தமர் திரு. ராஜீவ் காந்திக்கு, ஜனாதிபதி பிரேமதாசாவிட மிருந்து செய்தி ஒன்று விரை வில் அனுப்பிவைக்கப்படும் என்று தெரிகிறது.

ஜூலை மாதம் 29ம் திகதிக்கு முன்னதாக இந்திய அமைதிப் படையை விலக்கிக்கொள்ளத் தவறினால் அப்படைகள் முகாம்களுக்குள் முடக்கப் படவேண்டும் என்ற கோரிக் கையும் இந்தச் செய்தி மூலம் உத்தியோகபூர்வமாக இந்தி யப்பிரதமரிடம் விடுக்கப்படும் என்றும் தெரிகிறது.

இதே வேளையில், இலங்கை

(8-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - யாழ். யில் சேவை இல்லை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு - யாழ். ரயில் சேவை நடைபெறுவது பற்றி நேற்று மாலைவரை யாழ். புகையிரதப் பகுதியினருக்கு அறிவிக்கப்படவில்லை.

அதே வேளையில் நேற்றும் கொழும்பு—வவுனியா ரயில் சேவை நடைபெறவில்லை.

## கருத்து வெளியிட மறுப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி இலங்கை ஜனாதி

(8-ம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் பகுதியில் மயான அமைதி

### விசாரணைக்காக பலர் அழைத்துச்செல்லப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில், நந்தாவில் அம்மன் கோவில் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை ஏற்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து நந்தாவில் அம் மன் கோவில் பகுதியில் நேற்று மயான அமைதி நில வியது.

இப்பகுதி நேற்றும் மக்கள் நடமாட்டமின்றி வெறிச் சோடிக்காணப்பட்டது. நேற்றுமுன்தினம் ஏற்பட்ட சம்பவத்தைத்தொடர்ந்து வெளியேறிய மக்கள் நேற்றும் அச்சம் காரணமாக வீடுகளுக் குத்திரும்பவில்லை.

நேற்றுமுன்தினம் ஏற்பட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சர் இன்று யாழ்நகரில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரத ராஜாப்பெருமாள் இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்

(8-ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் 'ஏ. ஜே.' மினிபஸ் விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆங்கில விரிவுரையாள ரும் பிரபல பத்திரிகையாள ருமான ஏ. ஜே. கனகரத்ன (ஏ.ஜே), மினிபஸ் ஒன்றினால் மோதுண்டு, தலையில் ஏற் பட்ட படுகாயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்

(8-ம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் சம்பவம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் 14 சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில், ஆசைப்பிள்ளை ஏற்றம் என்னுமிடத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற சம்பவத்தில் இறந்த பதினான்கு பேரின் சடலங்கள் சாவகச்சேரி அரசினர் ஆஸ் பத்திரில் வைக்கப்பட்டிருந் தன.

நேற்றுப் பகல்வரை இச் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை என்று தெரி விக்கப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த (உயர்தர) பரீட்சை ஆகஸ்ட் 19-ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை ஆகஸ்ட்மாதம் நடத்துவதற் கான ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

ஆகஸ்ட் மாதம் 19-ம் திகதி முதல், செப்டம்பர் மாதம் 11-ம் திகதி வரை இப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு தோற்ற வுள்ள பரீட்சார்த்திகளுக் கான அனுமதிப் பத்திரம், நேரசூசிகை என்பன விரை வில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

## மாலிச் சந்தியில் தேடுதல்

(வடமராட்சி)

பருத்தித்துறை மாலிச்சந் திச் சுற்றுடலில் நேற்று பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை அப்பகுதியில் ஏற் பட்ட அசம்பாவிதம் தொடர் பாக நேற்று தேடுதல் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

## முல்லைத்தீவு சம்பவம்: சிறுவன் பலி, பலர் காயம்!

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை நடந்த மோதல் சம் பவத்தைத் தொடர்ந்து இடம் பெற்ற துப்பாக்கிச் சமரில் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி சிறுவன் ஒருவன் பலியானான். பலர் காயமடைந்தனர்.

ஷெல் தாக்குதலில் பலவீடு களும் சேதமடைந்தன.

இச்சம்பவத்தில் ஜமால் தீன் ஜெகதீஸ்வரன் (வயது 14) என்ற சிறுவனே பலியான

(8ம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரம் பகுதியில் தீவிர தேடுதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் நேற்று வர்த்தக நிலையங்களில் கறுப் புக்கொடிகள் கட்டப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை நகரில் கடை கள் திறந்திருந்தன. மற்றும்

(8-ம் பக்கம் பார்க்க)

## சூட்டுக்காயங்களுடன் 2 இளம் பெண்கள் சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

இரு இளம்பெண்களின் சட லங்கள் துப்பாக்கிச் சூட்டுச் காயங்களுடன் யாழ். ஆஸ்பத் திரியில் ஒப்படைக்கப்பட்டுள் ளன.

இச்சடலங்கள் சிறுப்பிட்டி, 8ம் கட்டையருகில் காணப் பட்டதாகவும் நேற்று முன் தினமிரவு சுடப்பட்டு இருக்க லாம் என்றும் தெரியவரு கிறது.

சிறுப்பிட்டி கிராமசேவை யாளரினால் லொறி ஒன்றின் மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்ட இச் சட லங்களில் நீர்வேலி தெற்கைச் சேர்ந்த முதலித்தம்பி சத்திய சோதி (20 வயது) என்பவரின் சடலம் மட்டும் அடையாளம் காணப்பட்டுள்ளது. மற்றைய சடலம் அடையாளம் காண்ப தற்காக யாழ், வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (கு)

## கொழும்பில் தேங்கிக்கிடந்த யாழ். தபால்கள் நாளை விநியோகம்?

[யாழ்ப்பாணம்]

கொழும்பு பிரதம தபாற் கந்தோரில் தேங்கிக்கிடந்த யாழ். மாவட்டத்திற்குரிய தபால் பொதிகள் அனைத்தும் நேற்று அநுராதபுரம் வந்த சரக்கு ரயில் வண்டியில் அனு ப்பி வைக்கப்பட்டதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

வவுனியா தபால் நிலைய ஊழியர்கள் இன்று அநுராத புரம் சென்று இத் தபால் பொதிகளை எடுத்து வருவர் என்றும், இவை வவுனியா செல்லும் யாழ். தபாலக ஊழியர்களிடம் ஒப்படைக் கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

(8ம் பக்கம் பார்க்க)

## சுண்டிக்குளிப் பகுதியில் பதற்றநிலை; பலர் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்நகர் சுண்டிக்குளிப் பகு தியில் கடந்த சில தினங்க ளாக பதற்றநிலை காணப்படு கிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

வெற்று சீமெந்து உறைகள் (Bags) தேவை. மில்க்வைற். யாழ்ப்பாணம். (ஏ 319)

அரியாலையில் சட்டத்தரணி அலுவலகமொன்றில் கடமையாற்றுவதற்கு எழுதுவினைஞர்கள் தேவை. க. பொ. த. சா/தரம் சித்தியடைந்தபெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். சொந்தக் கையெழுத்தில், விளம்பர இல. சி-3021, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உடன் விண்ணப்பிக்கவும். (சி-3021)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# வடக்கிலுள்ள குடும்பத்தினர்பற்றி வெளிநாட்டில் வேலை செய்வோர் கவலை!

(நெல்லியடி)

வெளிநாடுகளில் தொழில் புரியும் வடபகுதியைச் சேர்ந்த தமிழர்கள் இங்குள்ள தமது குடும்பத்தினர்களின் நிலைமைகளை அறிய முடியாது கவலையடைந்திருப்பதாக வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் மூலம் அறியப்படுகிறது.

தமிழ் பகுதிகளில் தற்போது நடைபெற்றுவரும் சம்பவங்களில் தமது குடும்பத்தினர் பாதிப்படைந்துள்ளனரா என வெளிநாட்டிலுள்ளவர்கள் அறிந்து கொள்வதற்கு பெரும் ஆவலாக இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

சிலர் வெளிநாட்டு ஒப்பந்தத்தை முடித்து விடு திரும்பும் வடபகுதியை சேர்ந்த

(7-ம் பக்கம் பார்க்க)

### விற்பனைக்கு

வைத்தியர்களினால் சிபார்சு செய்யப்பட்ட நீரழிவு வியாதிகளுக்கு உகந்த வறுத்த கோதுமை அரிசிக் குறுணல், வறுத்த கோதுமை, றவை, கோதுமை அரிசியில் அரைத்த ஆட்டாமா எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M. G. M. 777, K. K. S. Rd. & 208, 1st Cross St. Jaffna. சி-2929

## காலநடை வளர்ப்போர் கூட்டுறவு சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

இடம்: யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியர் அலுவலகம்
இல. 3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 2-7-89 ஞாயிறு காலை 9-30 மணிக்கு

மேற்படி கூட்டத்துக்கு கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோர் (மாடு, கோழி, ஆடுவளர்ப்போர்) தவறுது சமுகம் தந்து தங்கள் பிரச்னைகளை கலந்துரையாடி அங்கத்தவர்களாக சேரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

கால் நடை வைத்தியர்
யாழ்ப்பாணம்.

(சி 3025)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## க.பொ.த.(உ/த)கலைப்பிரிவு 1990-91

மேற்படி வகுப்பில் இருக்கும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அவ் வகுப்பிற்கு அனுமதி பெற விரும்புவோர் விண்ணப்பங்களை 12-07-89க்கு முன் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும். மேலதிக விபரங்களையும் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


அதிபர்.

யா. இ. க.
30-06-89. (ஏ 321)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில்: 18-12-1964

விண்ணுலகில்: 17-5-1989



**செல்வன் பொன்னுத்துரை வாமதேவன்**
(வாமு)

அன்பு மகனே! ஆசைச் சகோதரனே!
பாசமுள்ள மாமாவே! பணிவுள்ள மைத்துனனே!
அருமைத் தோழனே! எங்கள் அன்புத் தெய்வமே!
உம்மை நினைக்கும் போதெல்லாம்
உச்சி வெடித்து உடல் கருகுதையா!
உங்கள் அருமை முகத்தை இனி
எப்போது காண்போம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு அம்மா, ஐயா, அண்ணன், அக்காமார், தம்பி, மைத்துனர், மருமக்கள், நண்பர்கள்.
ஆவரங்கால், புத்தூர். (ஏ 3022)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு என்னால் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

தற்காலிக உதவி விரிவுரையாளர் (கணனி அலகு)
புள்ளிவிபரவியல் பேராசிரியர்
சைவசித்தாந்தத்தில் பேராசிரியர் (அறக்கொடைத்தவிசு)

**சம்பள அளவுத் திட்டம்:**

1. உதவி விரிவுரையாளர்; ரூபா 3900/- மாதமொன்றுக்கு (நிலையான)-
2. பேராசிரியர் ரூபா 12200-6 x 300 - 14000/- மாதமொன்றுக்கு

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்ப முடிவுத் தேதிகள் பின்வருமாறு:

1. தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவி: 1989-07-24
2. பேராசிரியர் பதவி: 1989-09-25

ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/செலுத்தி இவ்வலுவலகத்தில் பெறக்கூடிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பங்கள் செய்தல் வேண்டும். படிவங்களையும் இதர விவரங்களையும் தபால் மூலம் பெறவிரும்புவோர் 23 x 10 ச. மீட்டர் அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற கடித உறையுடன் ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் அபேட்சகரின் தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான சம்பளப்படியில் வைக்கப்படலாம்;

**குறிப்பு-**

சைவசித்தாந்தப் பேராசிரியர் (அறக்கொடைத்தவிசு) பதவிக்கான நியமனம் மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமாகவிருக்கும்.

பதிற்பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1989-06-30. (ஏ 317)

# சாவ. இந்துக் கல்லூரி: 143 மாணவர் தகுதி

(மட்டுவில்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து இந்த ஆண்டு க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் பெரும்பான்மையான மாணவர்கள் திறமைச் சித்தி எய்தியுள்ளனர்.

இப்பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் அறுபத்தி ஒன்பது சதவிகிதமான மாணவர்கள் க. பொ. த. உயர்தர வகுப்புக்கு தகுதிபெற்றுள்ளனர்.

இதில் ஐந்து அதி திறமைச் சித்திகளும, ஒரு திறமைச் சித்தியும் பெற்ற மாணவர்கள் ஆறுபேர். நான்கு அதி திறமைச் சித்திகளும் இருதிறமைச் சித்திகளும் பெற்ற மாணவர்கள் ஆறுபேர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றிய இந்த மாணவர்களில் 143 மாணவர்கள் க. பொ. த. உயர்தரம் படிக்க தகுதி பெற்றுள்ளனர்.

### மட்டுவில் மகாவித்தியாலயம்

மட்டுவில் மகாவித்தியாலயத்திலிருந்து புதிய பாடத்திட்டத்தின்கீழ் க. பொ. த. சாதாரண பரீட்சையில்தோற்றிய ஒரு மாணவன் மூன்று அதிதிறமை சித்திகளும்மூன்று திறமைச் சித்திகளும் பெற்றுள்ளார்.

# சாவகச்சேரிக்கு 40 ஆயிரம் கிலோ மா வந்துசேர்ந்தது

(மட்டுவில்)

சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் மக்களின் மா தட்டுப்பாட்டை நீக்குவதற்காகத் திருகோணமலைக்குச் சென்று பிறீமா ஆலையிலிருந்து 40,000 கிலோ மாவை லொறிகள்மூலம் சாவகச்சேரிக்கு கொண்டுவந்தது.

தென்மராட்சிப் பகுதியில் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதும், சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவு சங்கம், வட-கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. வேலாயுதபிள்ளையைச் சந்தித்து, ஏழைமக்கள் நிலைமையை எடுத்து விளக்கியது. தமக்கு அவசியம் 40,000 கிலோ மா வேண்டும் என வலியுறுத்தியது.

உடனே ஆணையாளர் 40,000 கிலோ மாவை திருகோணமலை பிறீமா ஆலையில் பெறுவதற்கான கட்டளையை வழங்கினார். உடனடியாக நான்கு லொறிகளை, சங்கம்திருமலைக்கு அனுப்பிவைத்தது.

திருகோணமலை மா ஆலையிலிருந்து மா வந்து சேர்ந்ததும் இப்பகுதி பாவனையாளர்களின் மா தட்டுப்பாடு நீங்கியது. மீண்டும் மா தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்குமுகமாக 6,000 கிலோ மாவை கொண்டுவருவதற்காக தமது லொறியைஅனுப்பி வைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சேர்ஜோனின் மகள் குத்திக் கொலை!

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலையின் மகள் செல்வி கொத்தலாவல இனந்தெரியாத நபர் ஒருவரினால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்,

கொழும்பிலுள்ள அவரது வீட்டில் வைத்து பிரஸ்தாப தினத்திலன்று மாலை அவர் கத்திக்குத்துக்கு இலக்கானதாகக் கூறப்படுகிறது.

சேர். ஜோன் தமது மகளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்த சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான விலைமதிப்புள்ள தங்கக் கைக்கடிகாரத்தை சந்தேக நபர் அப்போது எடுத்துச் சென்றதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட வீட்டின் காப்பாளரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

### வர்த்தகர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

மாத்தறை பள்ளிமுலையைச் சேர்ந்த திரு. மாட்டீன் கமகே என்ற வர்த்தகர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார். சைக்கிளில் வந்தவர்களே இவரது வீட்டில் வைத்துஇவரைச்சுட்டுக் கொன்றனர்எனத் தெரிகிறது.

உ

## குருக்கள் தேவை

வில்லூன்றி விநாயகர்தேவஸ்தானத்திற்கு கோவில் நித்திய பூசைகளையும் ஏனைய நைமித்திகாதிகளையும் பொறுப்பேற்றுச் செய்யக்கூடிய அறிவாற்றல், பண்பு, ஆசாரம், இறையுணர்வு, கட்டுப்பாடு, கடமையுணர்வு நிறைந்த முழுநேரக் குருக்கள் ஒருவர் தேவை.

0 சகல பூஜா திரவியங்களும் தேவஸ்தானத்தால் வழங்கப்படும், 0 வேதனம் பேசி நிர்ணயிக்கப்படும். (ரூபா 1250க்கு குறையமாட்டாது) 0 இலவச வீட்டு வசதி, 0 யாழ் பேருந்து நிலையத்திலிருந்து முக்கால் மைல் தூரம், 0 புரோகித வரவு, 0 இதரசலுகைகள்.

முழுப்பெயர், வயது, முகவரி, தற்போது சேவையாற்றுமிடம், கல்வித் தகைமைகள், அனுபவம் முதலிய விபரங்கள், விண்ணப்பதாரி பற்றி அறிந்து கொள்ளக்கூடிய இரு பிரமுகர்களது பெயர், முகவரிகள் ஆகிய விபரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்களை நேரடியாக ஆலய செயலகத்தில் நிருவாக உதவியாளரிடம் கையளிக்கலாம் அல்லது கீழ்க்கண்ட முகவரிக்கு தபாலில் அனுப்பலாம். முடிவு திகதி 15-7-89.

பொதுச்செயலாளர்,
வில்லூன்றி விநாயகர் தேவஸ்தானம்.
வில்லூன்றி, யாழ்ப்பாணம்.

(ஏ 3022]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜலலாபாத் நகர யுத்தத்தில்
# 10,000 கெரில்லாக்கள், 3000 ராணுவத்தினர் பலி
## மூன்றரை லட்சம் ராக்கெட்டுகள் ஏவப்பட்டன

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஜலலாபாத்நகரத்தைக் கைப்பற்ற அரசுப்படைகளுக்கும் முஜாகுதின் கெரில்லாக்களுக்கும் இடையில் இடம்பெற்ற பெரும் யுத்தத்தில் 10, 000 கெரில்லாக்களும் 3,000 இராணுவமும் கொல்லப்பட்டதாக சோவியத் தூதர் திரு. யூலி வரன்சோவ் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு மாதங்களாக இந்த யுத்தம் நடைபெற்றுவருகிறது. ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படையினர் வெளியேறியதைத் தொடர்ந்து இந்த நகரத்தைக் கைப்பற்றும் முழுமுயற்சியில் கெரில்லாக்கள் ஈடுபட்டு லருகின்றனர். எனினும் இராணுவத்தின் பலத்த எதிர்ப்பு இம் முயற்சிகளைத் தடுத்துவருகிறது.

இவ்வருடத்தில் ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையின்போது கெரில்லாக்கள் மூன்றரை லட்சம் ரொக்கட் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இதில் ஜலலாபாத் நகரத்தின் மீது மாத்திரம் ஒரு லட்சத்து முப்பத்தேழாயிரம் ரொக்கட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக திரு. யூலி வரன்சோவ் தெரிவித்துள்ளார்.

காபூலில் அரசு அதிகாரி ஒருவா தகவல் தருகையில் இவ்வருடம் முதல் ஐந்து மாதத்தில் இடம்பெற்ற யுத்தத்தில் 1,800 இராணுவத்தினரும், 16,00 பொதுமக்களும் கொல்லப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். கெரில்லாக்கள் தரப்பில் ஏற்பட்ட சேதம் பற்றி அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையில் ஆப்கான் யுத்தத்தை நிறுத்தகெரில்லாக்களுக்கும் அரசுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க பலஸ்தீனிய அமைப்பின் தலைவர் யாசிர் அரபாத் முன்வந்துள்ளார்.

## நகைத் தொழிலாளர் நடத்திய பேரணி

(கராச்சி)

பாகிஸ்தானில் நகைக் கடைகளில் தொடர்ந்து இடம்பெறும் கொள்ளைகளைக் கண்டித்து ஒரு லட்சத்திற்கும்மேற்பட்ட கடைத் தொழிலாளர்களும். நகைத் தொழிலாளர்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தியுள்ளனர்.

இவ்வூர்வலத்தில் பல சுலோக அட்டைகளில் பொலிசாரை வன்மையாகக் கண்டித்து வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. ஆர்ப்பாட்டக்காரர்களும் பொலிசாருக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பிச் சென்றனர்.

தமக்குப் பொலிஸ் பாதுகாப்பு வேண்டுமென்றே இவர்கள் இந்த ஊர்வலத்தை மேற்கொண்டனர். இதில் சுமார் 20,000 நகைக் கடைகளின் உரிமையாளர்களும் பங்குபற்றினர்.

பாகிஸ்தானின் பல பகுதிகளிலும் கடந்த சில மாதங்களில் இடம்பெற்ற கொள்ளைகளில் சுமார் 50 கோடி ரூபா பெறுமானமுள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## ‘அதிபர்கள் அனுபவங்களை பரஸ்பரம் பகிர்ந்துகொள்ள வேண்டும்’

(சுன்னாகம்)

‘அதிபர்களாகக் கடமைபுரிபவர்கள் அனுபவங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொள்ள வேண்டும். காலத்திற்குக் காலம் கல்விக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு அதிபர்கள் தமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். மேற்பார்வை செய்பவர்களாக மட்டுமின்றி வழிகாட்டி ஆலோசனைகளை வழங்குபவர்களாகவும் அதிபர்கள் பணிபுரிய வேண்டும்’.

இவ்வாறு மருதனமடம் கோட்டக்கல்வி அலுவலக பொது நிர்வாகப் பொறுப்பாளர் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி பாடசாலை அதிபர்கள் மத்தியில் உரையாற்றியபோது குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்து அவர் கூறியதாவது: பிரச்சினைகள் பல ஏற்படுகின்ற போதிலும் அவற்றையெல்லாம் ஒதுக்கி விட்டு அதிபர்கள் நடுவுநிலையில் நின்று செயற்படவேண்டும். ஆசிரியர்களைப் பாராட்டுவதுடன் அவர்களின் நல்லாலோசனையைப் பெற்றுக்கொள்ளும் மேலான பண்பும் இருத்தல் வேண்டும். பின்தங்கிய நிலையிலிருக்கும் சிறிய பாடசாலைகள் முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கற்பித்தலில் நவீன முறைகள் கையாளப்பட அதிபர்கள் உதவி செய்வதும் அவசியமாகும்.

இராமநாதன் மகளிர் கல்லூரியில் திரு. ஆர். கே. குலசேகரன், தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மானிப்பாய், கோப்பாய் கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த கொத்தணி அதிபர்கள் மற்றும் அதிபர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## “மதியபோசனத்திற்குப் பதிலாக பணம் வழங்கப்பட்டால் அதுபிள்ளைக்கு பயன்படாது”

(சுன்னாகம்)

‘தற்போது வழங்கப்படும் மதிய போசனத்திற்குப் பதிலாக பணம் வழங்கப்படுமேயானால் அது பிள்ளைக்கு எந்த வகையிலும் உபயோகமாகாது நிச்சயமாக அது பெற்றோருக்கு மட்டுமே பயன்படும். ஆகவே இதனை அதிபர்கள் ஒரு மேலான நடவடிக்கையாகக் கொண்டு தனக்குத் தானே நேர்மையாக இருந்து தப்பபிப்பிராயம் ஏற்படாத வகையில் சமுதாயத்திற்குச் செய்யும் பணியாகக் கருதிச் செயல்படவேண்டும்.

இவ்வாறு மருதனமடம் கோட்டக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த திட்டமிடல் கல்வி அதிகாரி திருமதி ஏ. துரைசிங்கம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

கொத்தணி அதிபர்கள் மற்றும் அதிபர்கள் கலந்து கொண்ட இக் கருத்தரங்கில் மேலும் அவர் கூறியதாவது:

உணவு பெறும் மாணவர்களின் வரவு ஒழுங்காகப் பதியப்படவேண்டும். பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள உணவுக்குழு அங்கத்தினரின் உதவியுடன் பொருட்களை வாங்குவதன் மூலம் தப்பபிப்பிராயத்தை தவிர்த்துக் கொள்ளலாம். உணவு சமைக்கும் போதும், பரிமாறும் போது சுகாதாரத்தைப் பேணவேண்டியது மிகவும் அவசியமாகும். தயாரித்த உணவுவகைகளை வாங்கிக் கொடுப்பதற்குப்பதிலாக பாடசாலையில் தயாரிக்க வேண்டிய ஒழுங்குகளை பெற்றோர் நலன் விரும்பிகள் மூலம் ஆக்கிக்கொள்வது சிறந்ததாகும், என்றார்.

## சீன நிலைமை: சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

(லண்டன்)

சீனவில் ஜனநாயக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் 33 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆயிரக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக சபை விடுத்த அறிக்கையில்; ஜனநாயக மாணவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சீன அரசு இராணுவ ரீதியில் அடக்கியுள்ளது. இதன்போது மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும, 5,000 பேர்வரை படுகாயமடைந்துமுள்ளனர். இப் போராட்டத்தில் ஈடுபட்டதாக ஆயிரக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான பலர் உயர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் மரணதண்டனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் மேன்முறையீடு செய்யக் குறுகியகால அவகாசம் வழங்கப்பட்டபோதும் அவற்றை மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. இது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும்.

இதுவரை 33 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கும் விரைவில் தண்டனை நிறைவேற்றப்படவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிப்பதாகச் சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சீன அரசு வெளிநாடுகளிலுள்ள தனது தூதர்களை அடுத்த ஓரிரு தினங்களில் பீக்கிங்கில் கூடுமாறு அவசர உத்தரவு விடுத்துள்ளது. சீனவின் தற்போதைய நிலைகுறித்து ஆராய்வதற்கும், வெளிநாடுகளில் இது தொடர்பான விளக்கங்களை அளிக்கவுமே இவ்வாறு வெளிநாடுகளிலுள்ள சீன தூதர்கள் அழைக்கப்படுவதாகவும் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்றனர்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தமது பதவிகளைப் பொறுப்பேற்கும்வைபவம் யாழ் சைனு ஹோட்டலில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக லயன்ஸ் வலயத் தலைவர் லயன் எஸ். பத்மநாதன் கலந்துகொண்டு உரையாற்றினுர்.

புதிய நிர்வாகத்தின் தலைவர் பதவியை லயன் எஸ். கே. நடராசா பொறுப்பேற்றுக் கொண்டார்.

## இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் யுத்தக் கப்பல்கள் குறைக்கப்படும்!
### அமெரிக்கா அறிவிப்பு

[வாஷிங்டன்]

இந்துசமுத்திர பிராந்தியத்திலிருந்து தனது கடற்படை யுத்தக் கப்பல்களின் எண்ணிக்கையைக் குறைக்க அமெரிக்கா முடிவுசெய்துள்ளது. இதற்கான அறிவிப்பு ஒன்று நேற்று வாஷிங்டனில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்துசமுத்திர பிராந்தியத்தில் தனது நேச நாடுகளினது பாதுகாப்புக் கருதியும், எதிரி நாடுகளின் ஆதிக்கம் இப் பிராந்தியத்தில் அதிகரிப்பதைத் தடுக்கும்முகமாக அமெரிக்கக் கடற்படை யுத்தக் கப்பல்கள் பல இங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் எண்ணிக்கையைக் குறைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ள போதும் விமான ரோந்து நடவடிக்கைகளும், யுத்தக் கப்பல்களின் நடமாட்டமும் தொடர்ந்தும் இப்பிராந்தியத்தில் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தற்போது அமெரிக்காவின் 25 யுத்தக் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு யுத்தக் கப்பல்களின் எண்ணிக்கையைக் குறைத்தாலும் இப்பிராந்தியத்திற்கான அமெரிக்காவின் கொள்கையில் மாறுதல்கள் எதுவும் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா வளைகுடா பகுதியிலும் தனது யுத்தக் கப்பல்களை நிறுத்தியுள்ளதுடன் [illegible] களிலும் ஈடுபட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

## “கோயில் திருவிழாக்கள் மூலம் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும்”

(யாழ்ப்பாணம்)

‘‘கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் மூலம் மக்களிடையே பக்தி பூர்வமான சிந்தனைகளையும் ஒற்றுமை எண்ணங்களையும் ஏற்படுத்தவேண்டும்’’ என்று அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கச் செயலாளர் திரு. த. மனோகரன் தெரிவித்தார்.

கொழும்புத்துறை நரசிங்க வைரவர் கோவில் மண்டபத்தில் இடம்பெற்ற இந்துசமயக் கலந்துரையாடல் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கலை மனிதனுடைய இயற்கை; இயற்கை கடவுளுடைய கலை.

— ஜேம்ஸ் பெய்லி

## நமது நோக்கு

# குழந்தைகளின் இரட்சகர்

இராமாயணத்தின் காவியத் தலைவன் இராமன். அந்த காவியத் தலைவனின் புகழுக்கு நல்ல பின்னணியாக விளங்கியவன் தம்பி இலட்சுமணன். இராமன் எடுத்த முயற்சிகளுக்கு எல்லாம் உற்ற துணையாக விளங்கியிருக்கிறான்.

தமிழ்ப் பிரதேசத்திலே, தமிழ்ப் பத்திரிகை ஒன்று தமிழர்களாலேயே நடத்தப்படவேண்டும்; தமிழர் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டு நடத்தவேண்டுமென்று ஒரு பத்திரிகையை ஆரம்பித்தவர் அமரர் கே. சி. தங்கராசா அவர்கள்.

அந்த இராமருக்கு - அவரின் அரும்பணிக்கு - உற்ற துணையாக நின்று உழைத்தவர் அவரின் அருமைத் தம்பி அமரர் டாக்டர் கே. சி. சண்முகரத்தினம் அவர்களே!

யாழ்ப்பாணத்திலே 'ஈழநாடு' வார இதழாக அரும்பி, தினசரியாக மலர்ந்தது. இலங்கையின் தலைநகருக்கு வெளியே முதன்முதலில் ஒரு பத்திரிகை ஆரம்பித்து நடத்துவதில் எத்தனையோ இடர்ப்பாடுகள் இருந்தன. அமரர் கே. சி. தங்கராசா அவர்கள் கொழும்பிலிருந்து இயக்கிவிட, யாழ்ப்பாணத்திலே செயல் நிர்வாகியாக இருந்தவர் இளவல் சண்முகரத்தினம் அவர்களே. எத்தனையோ நடைமுறைச் சிக்கல்களையும் இனிய முகத்தோடு தாங்கிக்கொண்டு, பத்திரிகை வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணியை தனது கதையாகக் கூறி மகிழ்கிறார்கள் உடனிருந்தோர்.

சென்னை சென்று வைத்தியம் படித்தவர் அமரர் சண்முகரத்தினம். படிக்கின்ற காலத்திலேயே தேசீய விடுதலை உணர்ச்சியைக் கொண்டிருந்தவர்; அதற்கான முயற்சியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

மேலைநாட்டு மருத்துவத்திலே மக்கள் மயங்கியிருந்த காலத்தில், ஆயுர்வேத மருத்துவச் சிறப்பை மீண்டும் மலரச்செய்ய அவர் ஆற்றிய பணி அளப்பரியது. ஏழைகளைக் கண்டு முகம் சுளிக்காது இலவச சிகிச்சைசெய்து மனநிறைவு பெற்றிருக்கிறார்.

இரவென்ன? பகலென்ன? எந்த நோயாளி எந்தவேளை வந்தாலும் ஆற்றவேண்டிய பணியை அன்போடு செய்ததை எண்ணி எண்ணி மகிழ்பவர் பலர். இவர் கைபட்டு உயிர்பெற்ற குழந்தைகள் ஏராளம், எனவேதான் 'குழந்தைகளின் இரட்சகர்' எனச் செல்லமாக அழைக்கப்பட்டார். நாட்கலண்டர் ஒன்றிலே இவர் நினைவு தினத்தை 'குழந்தைகள் இரட்சகர்' என்றே தலைப்பிட்டு குறிப்பிட்டதை நாம் மறப்போமா?

ஆயுள்வேத வைத்தியம் நலிந்துபோனதற்குரிய காரணம் என்ன? மேலைநாட்டு வைத்திய முறையில் அழகான மூறையில், நிறமூட்டப்பட்டுக் குளிகைகள், கலவைகள் வந்தன. எடுக்க, கொடுக்க, விழுங்க அவை தந்த வசதிகள் ஆயுள்வேத மருந்துகளில் இல்லை. கறுப்பாக, களியாக, கசப்பாக, கையால் உருட்டியதாக வந்தகாரணத்தால் நோயாளிகள் கஷ்டப்பட்டனர்.

இக்குறையை எவ்வாறு போக்கலாம்? கைபடாமலே குளிகைகளைச் செய்துவிட இயந்திரங்களை வரவழைத்திருக்கிறார் டாக்டர் அவர்கள். அவர் தொடங்கிய பணி தொடர்ந்திருந்தால், ஆயுள்வேத வைத்தியர்கள் அங்கிருந்து மருந்துகள் வரவில்லையே என்று ஏங்கியிருக்கவேண்டியதில்லையே?

இன்று சிதம்பரத்திலே சமாதியாகிவிட்ட இலக்கண சுவாமிகளின் மருகர் இவர். சுவாமிகள் கண்ட கனவுகள் பல டாக்டர் மூலம் நனவாகின. பொதுப் பணிகள் பலவற்றில் டாக்டர்பங்கேற்றியிருக்கின்றார். உதாரணத்திற்கு ஒன்று; சூறுவளியின்போது மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது வாடியபோது உதவிகளை ஒன்றிணைத்து அரும்பணியாற்றினார். நினைத்தால் நேற்று மாதிரி இருக்கிறது. ஆனால் அவர் மறைந்து இன்றுடன் 23 ஆண்டுகள் ஆகிவிட்டன!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தார்; அதனால்தான் வானுறையும் தெய்வமும் அவரை விரைவாக வரவேற்றுவிட்டதா?

# நினைவில் நீங்காத டாக்டர்

## அமரர் கே. ஸி. சண்முகரெத்தினம்

[மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என மதித்து வாழ்ந்தவர் அமரர் டாக்டர் க. சி. சண்முகரெத்தினம் அவர்கள். அன்னாரது நினைவு தினம் இன்று.]

வண்ணையம்பதியில் சின்னத்தம்பி பரிகாரியார், கந்தப்பிள்ளை சிற்றம்பலம் வைத்தியர் பரம்பரையிலே உதித்தவர் அமரர் சண்முகரெத்தினம் அவர்கள்.

''தோன்றிற் புகழொடு தோன்றுக...'' என்ற பொய்யாமொழிக்கமைவாக சிறுவயது முதலே பரோபகார சிந்தையும், கருணைஉள்ளம் கொண்ட பண்பாளராக சண்முகரெத்தினமவர்கள் விளங்கினார். பரம்பரைத் தொழிலான வைத்தியத்துறையிலே சிறந்துவிளங்கியதோடு மட்டுமல்லாது சித்தவைத்திய முறையை மேனாட்டு வைத்தியத்திற்கு நிகராக பல நவீன சீர்திருத்த முறைகளைக் கையாண்டார். வெளிநாட்டு இயந்திர சாதனங்களின்உதவியோடு உள்ளூர் தொழிலாளர்களைப் பயிற்றுவித்து ஔடத உற்பத்தியிலே பல சாதனைகளை நிலைபெறச்செய்தார்.



ஈழத்தின் வடக்கு கிழக்குப் பகுதி மக்களின் சுகவாழ்வுக்காக அவ்வப்பகுதி கிராம, பட்டின நகரசபைகள்தோறும் நிறுவப்பட்ட இலவச வைத்தியசாலைகளுக்கு தரம்மிக்க சிறந்த மருந்துவகைகளை அரச அங்கீகாரத்துடன் குறைந்த விலையில் கொடுத்துதவினார். இவரின் இப்பணியை வைத்தியர்களும் புகழ்ந்துரைத்துப் பாராட்டினர்.

1950 - 60ம் ஆண்டு காலகட்டத்தில் யாழ். நகரிலே பிரபல ஆங்கில வைத்தியர்களுக்கு இணையானது என்று மக்களால், அமரர் சண்முகரெத்தினம் ஆற்றிய வைத்திய சேவை மதித்து போற்றப்பட்டது.

நோய்வாய்ப்பட்ட குழந்தைகளின் கையை இவர் தொட்டுப் பார்த்தாலே, சூரியனைக் கண்ட பனி போல நோய் நீங்கிவிடும். இதனாற்போலும் 'குழந்தைகளின் இரட்சகர்' என்று டாக்டர் அவர்களைத் தாய்மார்கள் அன்பாக விதந்துரைப்பர்.

'ஏழைபங்காளன்', 'சமூக உபகாரி' என்றெல்லாம் இவரை அழைப்பதற்குச் சான்றுகள் பல உண்டு.

1958ம் ஆண்டு வகுப்புக் கலவரங்களில் தமிழ்மக்கள் அகதிகளாகி, அகதி முகாம்களில் தஞ்சம்புகுந்திருந்தனர். டாக்டர் அவர்கள் இலைமறை காய் போல் பலவித உதவிகளைச் செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தமது சகோதரர் அமரர் கே. சி. தங்கராசா அவர்களின் துணையோடு தமிழ்ப் பகுதியில் தமிழ்த்தினசரியான 'ஈழநாடு' பத்திரிகையை ஆரம்பித்து, இதன் மூலம் தமிழ்மக்களுக்கு ஆற்றிய சேவை உலகளாவியது. இவர் ஒரு சிறந்த நிர்வாகியும்கூட. எப்பொழுதும் இடதுசாரி சிந்தனையாளரோடு தொடர்புடையவராக இருந்தால் தொழிலாளர்களின் நலனில் அதிக அக்கறை கொண்டவராகக் காணப்பட்டார். முதலாளி - தொழிலாளி என்ற பாகுபாடு இல்லாமல் தமது வைத்தியசாலை, பத்திரிகைக் காரியாலய ஊழியர்கள் அனைவரையும் தமது குடும்ப உறவினர்போல மதித்து அவர்களின் இன்ப துன்பங்களிலும் பங்குபற்றிச் சிறந்த பண்பாளனாக விளங்கினார்.

எமது மண்ணின் மூலவளங்களைக் கொண்டு, பலவித உற்பத்தி சாதனங்களை உருவாக்குவதற்கு அரும்பாடுபட்டார். இரவு பகலாக சிந்தித்து திட்டங்கள் தீட்டினார். ஆனால் அத்திட்டங்கள் உருவாவதற்குள் அந்தக் காலகட்டத்திலேயே அவரை இறைவன் தம்பக்கம் ஈர்த்துக்கொண்டுவிட்டான். இது தமிழ் மக்களுக்கும் டாக்டர் அவர்களை நேசித்தவர்களுக்கும் சொல்லொணாத பேரிழப்பாகும்.

அன்னாரது நினைவு தினமான இன்று அவர் மக்களுக்குச் செய்த அளப்பரிய சேவைகளையும், மகேஸ்வரனுக்குச் செய்த தொண்டுகளையும் போற்றி வணங்குவோமாக!

கே. குப்புசாமி

# சமயப்பணி புரியும் ஞானவைரவர் ஆலயம்

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. இந்த முதுமொழிக்கு அமைவாக சைவ மக்களுக்கு பெரும் கொடையாக அமைந்திருப்பது ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவப் பெருமான் ஆலயம்.

ஆரம்பத்தில் சிறு குடிலாக இருந்த இந்த ஆலயம் படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று புதிய தோற்றத்தில் பொலிவுடன் அமைவு பெற்றுள்ளது. எதிர் காலத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் கொண்ட ஆலயமாகி விடும் என்பதில் ஐயம் இல்லை.

இவ்வாலய வளவில் சுண்டிக்குளி சைவ மகா சபையினர் சிறுவர்பாடசாலை ஒன்றை அமைத்திருப்பதுடன் சனி, ஞாயிறு, தினங்களில் இலவச சமய வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றனர். வெள்ளிக்கிழமைதோறும் கூட்டுப்பிரார்த்தனைகளையும், விழாக்காலங்களில் சமய நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இச்சபையுடன் திருவாசகம் சபாரெத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையும் ஆலயவளர்ச்சியில் பூரண ஒத்துழைப்பு நல்கி வருகின்றது.

இவ்வாலயத்தி[illegible] ஆண்டு தோறும் [illegible]வானக் கோல அபிஷேக தினமாகிய ஆவணி மூலநட்சத்திரத்தில் அலங்கார உற்சவம் ஆரம்பமாகி [illegible] ரெண்டு நாட்கள் நடைபெறும். மறுநாள் மாகேஸ்வர பூசையும் பஞ்சமுக அர்ச்சனையும் நிகழும். நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை விழாக்களுடன் ஆடிமாத இறுதிச் செவ்வாய்க்கிழமை நாளாகக் கொண்டு நாட்களுக்கு இலட்சநாம அர்ச்சனை நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. அலங்கார உற்சவ ஆரம்ப இறுதி நாட்களிலும், திருவெம்பாவை இறுதி நாளிலும் சுவாமி வெளிவீதி எழுந்தருளி ஊர்மக்களுக்கு அருள் பாலிப்பார்.

(இன்று அலங்கார உற்சவ தின இறுதிநாள்.)

-த. தவசீலன்

# தொன்மை சிறப்புமிக்க வீரபத்திரர் ஆலயம்

வீரபத்திரருக்கு எடுக்கப்பட்ட திருத்தலங்களும் சிவாலயங்களில் அடங்குகின்றன. யாழ்ப்பாணக் குடாப் பிரதேசத்தின் வீரபத்திரர் திருத்தலங்களில் மூர்த்தி அருள்பொலிவும், திருக்கோவில் அமைப்பும் ஒருங்கே அமைந்து தொன்மைச் சிறப்புறுவது; வடமராட்சியில் வியாபாரிமூலை அருள்மிகு வீரபத்திரர் கோவிலாகும். வலிகாமம் கிழக்கில் மூர்த்தி அருள் பொலிவுக்கும் விதிமுறை வழிபாட்டுக்கும் தொன்மைச் சிறப்புறும் வீரபத்திரர் கோயில்; கோப்பாய் தெற்கு - பழைய வீதி 'தனிப்பனை ஒல்லை அருள்மிகு வீரபத்திரசுவாமி' கோவிலாகும். இத்திருத்தலத்தின் தல விருட்சம்; தால (பனை) விருட்சமே.

சேர் கந்தையா வைத்தியநாதனின் முன்வழித்தோன்றல் விஞசிஉடையார் காலம் முதல் 150 ஆண்டு காலம் தொடர்ந்த வரலாற்றினைச் கூறும் இக்கோவில் 1932ல் கற்கோவில்திருப்பணிபெற்றமகா கும்பாபிஷேகம் கண்டது. இதனைத் தொடர்ந்து வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமானது. 1977ல் சேர் கந்தையா வைத்தியநாதனின் பரம்பரையினரின் அனுசரணையின்மூலம் இக்கிராமப் பொது மக்களினால் தெரிவுபெற்ற பரிபாலனசபை ஒன்று உருவாக்கப்பட்டது. இச்சபையின் நிர்வாகத்தில் வளர்ச்சிகண்ட இத்திருக்கோவில், பெருங்கோவிலுக்கான திருப்பணியின் முதலாம் கட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளதையடுத்து 1980ல் மணவாளக் கோல கும்பாபிஷேகம் நிகழ்வுற்றது. இக்கும்பாபிஷேகத்தினம் ஆண்டு தோறும் சித்திரைமாத வளர்பிறையில்வரும் அத்த நட்சத்திரத்தில் மணவாளத் திருவிழாவாக நடைபெற்று வருகின்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

## பலதும் பத்தும்

### மதமாற்றம்

இலங்கையின் அரசியல் வரலாற்றில், அரசியல் நோக்கங்களுக்காக மதம் மாறியவர்கள் பற்றிக்கேள்விப் பட்டிருக்கிறோம். குறிப்பாக, தென்னிலங்கையில் பெரும்பான்மை மசகளது பௌத்தத்திற்கு மாறியவர்கள் பற்றியும் அறிந்திருப்பீர்கள்.

ஆனால் இத்தகைய சம்பவங்கள் இன்றும் நடைபெறுகின்றதா? ஆமாம்! அண்மையில் ஆர்ஜென்ரைனாவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. எதிர்க்கட்சியான பெரோனிசக்கட்சி வேட்பாளர் கார்லொஸ் சோல் மெனெம் வெற்றிபெற்றுள்ளார்,

யார் இவர்? இவரது பெற்றோர்கள் வந்து குடியேறியவர்கள்; 1920ஆம் ஆண்டளவில் சிரியாவிலிருந்து வந்தவர்கள்; சுனிமுஸ்லீம்கள்.

ஆர்ஜென்டைனாவின் அரசியல் சட்டம் கூறுவது என்ன? அந்த நாட்டுக்கு ஜனாதிபதியாக இருக்கத் தகுதி வாய்ந்தவர் ரோமன் கத்தோலிக்கராக இருக்க வேண்டும். எனவே மெனெம் மதம் மாறியிருக்கிறார் ஏற்கனவே!

இன்னொரு தகவல்; பாரதப் பிரதமர் ராஜீவ்போல் இவரும் ஒரு 'பைலட்' - அதாவது ஒருவிமானமோட்டியாகப் பயிற்சி பெற்றவர்!

வாணி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவிரவாத நடவடிக்கை: 100 இளைஞர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது

(கொழும்பு)

தீவிரவாத நடவடிக்கைக ளில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் சுமார் நூறு இளைஞர்களை பாதுகாப்புப்படையினர் கைதுசெய்திருக்கின்றனர்.

பொலன்னறுவ, கொகுவல, களனி, கண்டி ஆகிய பகுதிகளை அண்மையில் பாதுகாப்பு படையினர் சுற்றிவளைத்தபோது இந்த இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இராணுவக் கப்டன் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உத்தியோகஸ்தர் ஒருவர் உட்பட பத்துப்பேரின் கொலைச் சம்பவங்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜெய்ப்பூர் தொழிற்சாலையில் 249 பேருக்கு செயற்கை கால் பொருத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தும் தொழிற்சாலை நாளை முதலாம் திகதியுடன் இரண்டாவது ஆண்டைப் பூர்த்திசெய்கிறது.

இத்தொழிற்சாலையில் கடந்த இரண்டாண்டுகளில் கால் ஊனமுற்ருேருக்கு 249 செயற்கைக் கால்களைப் பொருத்தியுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற வன்செயல்களைத் தொடர்ந்தே செயற்கைக் கால் பொருத்தும் தொழிற்சாலையொன்று தமிழ்ப் பகுதிகளுக்கு அவசியமெனக் கருதப்பட்டதால் பல பெரியார்களின் முயற்சியால் இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது இதன் தலைவராக திருமதி தேம்பா குணநாயகம் சேவைபுரிந்து வருகிருர்.

## தொன்மை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவஸ்தானத்தின் அலங்கார உற்சவம் 1983ல் இருந்து மஹோற்சவ மாக்கப்பட்டு ஆண்டுதோறும் ஆனி உத்தரத்தைத் தீர்த்தத் திருவிழாவாகக்கொண்டு பத்துத் தினங்களுக்கு மஹோற்சவம் நிகழ்கின்றது.

சிவனின் விசேட தின விழாக்கள் அம்பாளின் விசேட தின விழாக்களும் பெருங்கதை விரத 21 நாள் இலட்சார்ச்சனையும் கந்தஷஷ்டி விரதம், திருவெம்பாவை முதலிய விசேட உற்சவங்களும் நடைபெறுகின்றன. தேவஸ்தானத்தின் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அலங்காரத் திருவிழா ஆண்டுதோறும் ஆடிப்பூரத்தை முடிவாகக் கொண்டு பத்துத் தினங்களுக்கு நிகழ்வுற்று 'சிவசக்தி' அருட் கருணை இத் திருத்தலத்தில் மிளிருகின்றது.

— சோ. இ. பி. ஹரன்

(இன்று மஹோறசவம் ஆரம்பமாவதையொட்டிஇக்கட்டுரை பிரசுரமாகின்றது)

## "இறைவழிபாட்டில் அதிக கவனம் செலுத்துவோம்"

(யாழ்ப்பாணம்)

"சுயநலநோக்குடன் இறைவனைப் பிரார்த்தித்த நாம், இன்று எமது இளஞ்சிருர்களின் எதிர்கால நல்வாழ்விற்காக பொதுநலத்துடன் ஒன்று சேர்ந்து வழிபட முன்வந்துள்ளோம். இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் தெய்வ வழிபாடே அமைதியையும்' பாதுகாப்பையும் நமக்கு அளிக்கவல்லது. வேறென்றுலும் அடைய முடியாத நல்வாழ்வைப் பிரார்த்தனை செய்வதன்மூலமே பெறலாம். அன்போடும், தெய்வீக உணர்வோடும் ஒன்றுபட்ட மனதுடனும் நல்வாழ்வு, நல்லறிவு, நற்கருணை ஆகியவற்றை அருளும்படி இறைவனை வேண்டினல் கட்டாயமாக அருள்புரிவார்''.

இன்றைய இளஞ்சந்ததியினரின் எதிர்காலம் ஒளிமயமாக அமையவேணடும் என்றநோக்கத்துடன் இறைவனைப்பிரார்த்தனை புரிவதற்காகப் பெற்ருேர்–ஆசிரியர்கள் மற்றும் இந்து இளைஞர் மன்றத்தினராலும் கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட பிரார்த்தனை வழிபாட்டில் அதிபர் கா. கணேசதாசன் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறிஞர்.

பெற்ருேர், பழைய மாணவர்கள், பாடசாலை அதிபர்கள் பலர் பிரார்த்தனையில் கலந்து உரையாற்றினர். ஓய்வு பெற்ற முன்ஞள் அதிபர் திருமதி க. தர்மலிங்கம், ஆசிரியை திருமதி ச. சந்திரசேகரி ஆகியோர் கூட்டு வழிபாடு நடத்தினர். இறுதியில் விசேட பூசையுடன் பிரசாதமும் வழங்கப்பட்டது.

## யாழ். மாவட்டத்தில் எரிபொருள் நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட விற்பனை

[யாழ்ப்பாணம்]

பாவனையாளர்களின் நன்மைகருதி யாழ். மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிலையங்களல் மட்டுப்படுத்தப்பட்ட முறையில் பெற்ருேல், டீசல் ஆகியன விநியோகிக்கப்படும் என பெற்ருேலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்னும் ஓரிருதினங்களில் போதியளவு எரிபொருள்களை விநியோகம்செய்யக்கூடியதாக இருக்கும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளையில் போக்குவரத்துச்சபை பஸ்ஸுக்குத் தேவையானடீசல்கையிருப்பில் இருப்பதாக போக்குவரத்துச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## 9 லொறிகள்; 6 பஸ்கள் டயர்கள் வெட்டப்பட்டன

(கொழும்பு)

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில்சேவையில் ஈடுபட்டிருந்த வாகனங்களில் ஒன்பது லொறிகள், ஆறு பஸ்கள் அநுராதபுரம் பகுதியிலுள்ள கலகந்தம என்ற இடத்தில் வழிமறிக்கப்பட்டு அவற்றின் டயர்கள் வெட்டப்பட்டன.

சம்பந்தப்பட்ட வாகனங்களில் பிரயாணம் செய்த பிரயாணிகளை எவருக்கும் இந்தச் சம்பவத்தின்போது எந்தவிதமான துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லையெனவும் கூறப்படுகிறது

போக்குவரத்து நேற்று சுமுகமாக நடைபெற்றுள்ளது.

## மதிய போசனம் பரிசோதனை

(சுன்ஞகம்)

நவாலி அட்டகிரி தமிழ் மகாவித்தியாலய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மதிய உணவு, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். குணரத்தினத்திஞல் பரிசோதனை செய்யப்பட்டது.

கலோரிப் பெறுமானம் உட்பட உணவிலுள்ள உயிர்ச் சத்துக்கள் குறித்தும் பரிசோதனை செய்யப்பட்டது.

## தோட்டத் துரைமாருக்கு ஜீப் வண்டிக்குப் பதிலாக குதிரைகள் வழங்க சிபார்பு

[கொழும்பு]

தோட்டத்துரைமாருக்கு ஜீப்வண்டிகளுக்குப் பதிலாக குதிரைகளை வழங்குமாறு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

தோட்ட முகாமைத்துவ நிறைவேற்று உத்தியோகதர்களின்நிறைவேற்றுக்குழுபெருந்தோட்டக் கைத் தொழில் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்காவுக்கு மேற்படி சிபார்சை செய்திருக்கிறது.

தற்போது தோட்டத்துரைமாருக்கு விலைமதிப்புள்ள 'பஜரோ' 'டுரூபார்ஸ்' ஜீப் வண்டிகள் தோட்ட மேற்பார்வை வேலைகளுக்காகவழங்கப்பட்டு வருகின்றன.

இதற்குப்பதிலாக அவர்களுக்குக் குதிரைகள் வழங்கிஞல் அதன் மூலம் வருடம் ஒன்றுக்கு சுமார் அறுபது லட்சம் ரூபாவை மீதப்படுத்த முடியும் என [illegible] கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

## வயோதிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கடைக்குப் பாண் வாங்கச் சென்ற வயோதிபர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

பாஷையூர் வீதியில் இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு, கைத்தான் றப்பியல் (வயது62) என்ற வயோதிபர் இலக்காகிப் படுகாயம் [illegible] யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இப்படியும் நடக்கிறது

**1964-ம்** ஆண்டை வடக்கு, கிழக்கு மக்கள் இலேசில் மறந்திருக்க முடியாது. இயற்கையின் சீற்றத்துக்கு வடக்கு. கிழக்கு பலியான ஆண்டு அது, அதாவது சூருவளியின் கோரத் தாண்டவத்துக்கு இலக்கான வருடம் என்று கூடச் சொல்லாம்.

'ஈழநாடு'வைப் பொறுத்தவரை 1964-ம் ஆண்டும் மறக்கமுடியாத வருடம்தான்!

சூருவளியிஞல் யாழ். நகரும் சோபை இழந்து காணப்பட்டது. மரங்கள் எல்லாம் வேருடன் சாய்ந்து கிடந்ததால் வீதிப் போக்குவரத்தும் முற்ருக ஸ்தம்பிதமடைந்திருந்தது. மின் கம்பங்கள் ஆங்காங்கே சரிந்தும் வீழ்த்தும் கிடந்தன. மின்சாரமும் தொலைபேசியும் துண்டிக்கப்பட்டு, யாழ். மாவட்டமே ஒளி - ஒலியை இழந்துவிட்டது.

இரவில் மின்சாரம் இல்லை. வெறும் மெழுகுதிரியின் ஒளியில் எப்படியோ செய்திகளைத் தயாரித்துவிட்டோம் ஓரிரண்டு பெற்ருேமாக்ஸ்' உதவியுடன் அச்சுக்கூடமும் தனது திறமையைக் காட்டி பக்கங்களும் தயாராகிவிட்டன. இனி... மெஷினில் பக்கங்களைப் போட்டு அச்சடிக்க வேண்டும். ஆஞல் மெஷின் ஓடவேண்டுமே! மெஷின் ஓட மின்சாரம் வேண்டுமே! ஊழியர்கள் அனைவரும் விழித்து முழித்துக்கொண்டிருக்கின்ருேம்... விடிந்தும் விட்டது.

ஒரு பெரியவர் வருகிருர். ஆஜாஞுபவஞன தோற்றம். வெள்ளை ஷேர்ட், வெள்ளை வேட்டி.

''என்ன யோசிக்கின்றீர்கள்... நாளைக்கு 'ஈழநாடு' வரவேண்டுமல்லவா? சூருவளிச் செய்திகளை நம் மக்கள் படிக்கவேண்டாமா...''

நாங்கள் தலையைச் சொறிய முன்னர்.....

வேட்டியை மடித்தார். சண்டிக்கட்டுக் கட்டிஞர்.

''வாங்க... மெஷின் சில்லை கையால் மாறி மாறி எல்லோரும் சுற்றுவோம்...'' என்று கூறி அவரே முதலில் கை வைத்தார்.

'தேர்' மெதுவாக நகர்ந்தது. ஒவ்வொரு பத்திரிகையாக அச்சுவாகனத்திலிருந்து வெளியே எடுத்தோம்.

அந்தப் பெரியவரின் வீட்டிலிருந்து சுடச்சுட பால் காப்பியும், ஒரு கடையிலிருந்து வடையும் பெறப்பட்டு களைத்துப்போனவர்களுக்கு மட்டுமன்றி 'பார்வையாளர்' களுக்கும் வழங்கப்படுகிறது.

நண்பகலுக்கு முன்னரே எப்படியோ ஐநூறு பத்திரிகைகள் வெளிக்கொணரப்பட்டு, மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுவிட்டன. அந்த ஐநூறு பத்திரிகைகளும் நிச்சயம் ஐயாயிரம் பேரின் செய்திப் பசியைத் தணித்திருக்கும்!

மறக்கவில்லை. அந்தப் பெரியவர்தான் அமரர், எங்கள் டாக்டர் கே. வி. சண்முகரத்தினம். அவர் அமரரான தினம் 30-6-1966.

"ஊடுருவி"

## "ஆலயங்களை புனிதமாக வைத்திருக்க வேண்டும்"

[மட்டுவில்]

''மனித குலமே இன்று அமைதிதேடி அலைகின்றது. அமைதியை, நிம்மதியைத் தேடி மதி ஆலயங்களையே மக்கள் நாடிச் செல்வதை நாம் காணமுடிகிறது. எனவே, மனித மனத்திற்கு அமைதியையும், நிம்மதியையும் தரும் ஆலயங்களைப் புனிதமான முறையில் வைத்திருக்கவேண்டியது எமது கடமை''.

இவ்வாறு சரசாலை நுணுவில் ஸ்ரீசிதம்பர விநாயகர் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தலைமை உரை நிகழ்த்திய சைவ சித்தாந்தப் புலவர் திரு. ச. கைலாயபிள்ளை கூறிஞர்.

தலைவர் கைலாசபிள்ளை மேலும் கூறியதாவது:-

''மனித உள்ளங்களுக்கு அமைதியை, அன்பை, நிம்மதியைத் தந்து ஆன்மீகத்தை வளர்ப்பது ஆலயங்கள் புனிதமாகப் பேணப்படவேண்டும். ஆலயத் தொண்டில் ஏன் மக்கள் அவசியம் ஈடுபடவேண்டுமென்ருல், மனித உள்ளங்களில் ஆன்மீகத்தை வளர்த்து மனிதனை மனிதஞக வாழ வைப்பது என்பதற்காகவே. எமது இளம் சமுதாயம் கண்டிப்பாக ஆலயத் தொண்டில் ஈடுபடவேண்டும்''.

## சிறந்த பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைக் கொத்தணி அமைப்புப் பாடசாலைகளில் ஒன்ருன யா / அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், இவ்வருட க. பொ. த சாதாரணதர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது.

பரீட்சைக்குத் தேற்றியோரில் 60 வீத மாணவர்கள் உயர் கல்வி பெற தகுதிபெற்றுள்ளனர். ஒரு மாணவி 4 விசேட திறமைச் சித்தியும், 2 திறமைச் சித்தியும் ஒரு மாணவர் 4 விசேட திறமைச் சித்தியும், ஒரு திறமைச் சித்தியும், ஒரு சாதாரண சித்தியையும் பெற்றுள்ளனர். 8 மாணவர்கள் 2 விசேட திறமைச் சித்தியைப் பெற்றுத் தேறியுள்ளனர். 4 மாணவர்கள் ஒரு விசேட திறமைச் சித்தியைப் பெற்றுத் தேறியுள்ளனர்.

இப்பாடசாலை ஒரு கஷ்டப் பிரதேசப் பாடசாலை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகர் குருபூசை; திருத்தல பாதயாத்திரை

## ஜூலை 7-ம் திகதி ஆரம்பம்

[பண்டத்தரிப்பு]

காரைநகர் மணிவாசகர் சபையினர் நடாத்தும் மணிவாசகர் குருபூசையும், திருத்தல பாதயாத்திரையும் எதிர் வரும் 7-ம், 8-ம், 9-ம் திகதிகளில் காரைநகரில் நடைபெறவுள்ளது.

7-ம் திகதி வெள்ளிக்கிழமையன்று காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன் ஆலயத்தில் மாணிக்கவாசகப் பெருமானுக்கு விசேட அபிஷேகமும், பூஜையும், காலை ஒன்பது மணிக்கு நடைபெறுவதுடன் விழா ஆரம்பமாகும். இதனை தொடர்ந்து ஆத்மஜோதி நா. முத்தையா சிறப்புச் சொற்பொழிவும், அதனைத் தொடர்ந்து காரைநகரிலுள்ள பிரபல கல்லூரிகளின் சார்பில் மணிவாசகர் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.

மறுநாள் 8-ம் திகதி சனிக்கிழமையன்று காலை 6-30 மணிக்கு ஆத்மஜோதி நா; முத்தையா தலைமையில் காரைநகர் துறைமுகம் சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து திருத்தலப் பாதயாத்திரை ஆரம்பமாகும். அங்கிருந்து புறப்படும் பாதயாத்திரை இராஜராஜேஸ்வரி அம்பாள்ஆலயம், வியாவில், ஐயனார் கோயில், கருங்காணி முருகமூர்த்தி ஆலயம், வாரிவளவு கற்பகப் பிள்ளையார் கோவில், அண்ட வேத பிள்ளையார் கோவில், புளியங்குளம் பிள்ளையார் கோவில், தங்கோடை நாகம்மாள் கோயில். மணற்காடு முத்துமாரி அம்மன் கோவில், பயிர்க்கூடல் சுப்பிரமணிய சுவாமி கோயில், அரசடிக்காடு ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோவில், காமாட்சிக்கேணி வைரவர் கோயில், பண்டத்தரிப்பான்புலம் சிவகாமி சிதம்பரேஸ்வரர் கோயில், புகலி சுப்பிரமணிய சுவாமி கோவில், காளி கோவில், கோவளம் ஞான வைரவர் கோவில். ஆலங்குன்றடி வைரவர் கோவில். மல்லிகை வைரவர் கோவில் ஆகிய கோவில்களுக்குச் சென்று அன்றுமாலை 5-30 மணியளவில் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மறுநாள் எதர்வரும் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று காலை 7-மணிக்கு காரைநகர் சடையாளி ஞானவைரவர் ஆலயத்திலிருந்து புறப்படும் திருத்தலபாதயாத்திரை பல்வேறு ஆலயங்களுக்கும்சென்று மாலை 4 மணிக்கு பாலாவோடை அம்மன் கோவிலைச் சென்றடையும். அங்குபொதுக் கூட்டம் காரைநகர் மணிவாசகர் சபைத் தலைவரும். சுப்தரமூர்த்திநாயனார் வித்தியாலய அதிபருமான திரு. செ. தேவதாசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

மக்கள் உள்ளத்தில் சமய உணர்வையும், பக்தி உணர்வையும் ஏற்படுத்தும் நோக்கமாக கொண்டு இத்திருத்தலப் பாதயாத்திரை ஒழுங்குசெய்யப்பட்டிருப்பதால் இதில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டு நலன்பெற வேண்டும் என்று காரைநகர் மணிவாசகசபையினர்வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

# வேலை வாய்ப்புப் பதிவு விண்ணப்பம்

நாட்டிற்காகவும், மக்களுக்காகவும், எவ்விடர்களிடையேயும், தமது கடமைகளை ஆற்றக்கூடிய, யாழ் மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் அல்லது தகுதி குறைவான வேலைகளில் இருக்கும் அனைவரும் யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் செயலகத்தின் தகவல் அதிகாரியிடம் கீழ்க்காணும் தகவல்கள் அடங்கிய விண்ணப்பப் பத்திரத்தை நேரில் கையளிக்கும்படி வேண்டப்படுகிறார்கள். விண்ணப்பங்கள் யாவும் யாழ். செயலக விசாரணைப் பிரிவில் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. பெயர்:
2. தந்தை பெயர்;
3. பிறந்த திகதி:
4. விலாசம்:
5. தேசிய அடையாள அட்டை இல:
6. உதவி அரசாங்க அதிபர் பிரிவு:
7. மாவட்டம்:
8. அடிப்படைக் கல்வி தகுதி:
   - அ) க. பொ. த. (சாதாரணம்)
   - ஆ) க. பொ. த. (உயர்தரம்)
   - இ) ஏனையவை - குறிப்பிடுக
9. உயர் கல்வி தகுதி;
   - அ) பட்டதாரி:
     கலை/விஞ்ஞானம்/விசேடதுறை
   - ஆ) உயர்பட்டதாரிகள் தகுதிகளும்-துறைகளும்;
   - இ) விசேட தகுதிகள்:
10. தொழிற் தகுதிகள்:
    - அ) தொழில்நுட்பப் பிரிவு
      கம்பியூட்டர் - எலக்ரோனிக்ஸ் - போர்மன் போன்றன
    - ஆ) தொழில் திறமை:
      மேசன், மரவேலை, வெல்டிங், லேத், ரைப்பிங் போன்றன
    - இ) கூலி வேலை:
11. வேலை அனுபவம் (வருடங்கள்):
12. வேலைசெய்ய விரும்பும் துறைகள்:
13. பிற குறிப்புகள்:

**யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர்.**

அரசாங்க செயலகம்,
யாழ்ப்பாணம்.

(ஏ-318)

# இராசி பலன்

**30-06-1989**

துவாதசி மாலை 4-03 வரை; கார்த்திகை மாலை 5.54 வரை, இராகு காலம் 10.26 முதல் 12.00 வரை; சித்தயோகம், கார்த்திகை விரதம், பிரதோஷ விரதம்.

மேஷம்: பொருள் செலவு, காரியத்தடை, மனையில் சஞ்சலம், பெரியோர் பகை, தொழில் சமசித்தி, வெறுப்பு மிகுதி.

இடபம்: நோய் தணியும், அயலவர் உதவி, குடும்பத்தில் மகிழ்ச்சி, சகோதர பகை, கள்ளர் பயம், அலங்காரம்.

மிதுனம்: கடன்படல், அரசியல் தர்க்கம், வாக்குவசீகரம், குடும்பப் பிரிவு. மக்களால் செலவு, ஆலயதரிசனம்.

கடகம்: தொழில் லாபம், காரிய அனுகூலம், பயணங்களால் சிறப்பு, மாதாவழி உதவி, அரச பாராட்டு,

சிங்கம்: புதியநிலை, குடும்பத்தில் ஒற்றுமை, தொழில் முயற்சி, பொதுப்பணி, அறிஞர் பாராட்டு.

கன்னி: தகாத உறவு, ஸ்திரி நேசம், பணவரவு, குடும்பத்தில் குழப்பம், செலவு, மனவேதனை.

துலாம்: வாக்கு வாதம். பயனற்ற செயல, கல்வி வாய்ப்பு, குடும்பச் சுமை தொழில் நஷ்டம்.

விருச்சிகம்: உயர்ந்த நிலை, குடும்ப மகிழ்ச்சி, மனநிறைவு, புதிய செய்தி, ஆபரண சேர்க்கை.

தனுசு: சகோதர பாசம், குடும்ப சந்தோஷம், தூரத்து உறவு, கடல் வழிப்பயணம்.

மகரம்: வீண்பகை, வேலைப் பளு, நண்பருதவி காரியத் தடை, அலைச்சல், உபாதை.

கும்பம்: அதிர்ஷ்டக்குறைவு, பொருள் லாபம், அதிகாரிகள் தொல்லை, தீயநட்பு, சினம்.

மீனம்: கடமை உணர்வு, காரிய அனுகூலம் பணவரவு, மனவிகாரம், கவலை, அலைச்சல்.

## ஓய்வு பெற்றார்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பிரதம தபாற்கந்தோரில் கடந்த 37 ஆண்டுகளாக தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு. ஆ. [illegible] ஓய்வு பெறுகின்றார்.

# 'மனஉறுதி உடல்வலிமைக்கு விளையாட்டுப்போட்டி உதவும்'

(மாவிட்டபுரம்)

''சர்வோதயம்மூலம் பாலர்களுக்கு இலவசக்கல்வி அளித்தும், போஷாக்குணவு வழங்கியும் வருவதுடன் அவர்களிடையே விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி வருகின்றோம். பாலர் வயதிலேயே மன உறுதியையும், உடல் வலிமையையும் வளர்க்க இவ் விளையாட்டுப் போட்டிகள் உதவும்''

இவ்வாறு அளவெட்டி கலைவாணி பாலர்பாடசாலை விளையாட்டுப்போட்டிக்கு தலைமை தாங்கி உரையாற்றிய சர்வோதய இயக்க போதனாசிரியை செல்வி என். யோகராணி கூறினார்.

அளவெட்டி சீனக்கலட்டி ஞானோதய வித்தியாசாலை மைதானத்தில் நடந்த இவ் விளையாட்டுப் போட்டியை பிரதம விருந்தினர் திரு. அ. திருநாவுக்கரசு கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்.

பண்டிதர் க. நாகலிங்கம், திரு. எஸ். நகுலேஸ்வரலிங்கம், செல்வி. சாரதா சுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர்.

## உற்சவங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பழம் ரோட் கந்தர்மடம் ஸ்ரீ சித்தி விநாயகர் ரதோற்சவம் நாளை சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அபிடேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஸ்ரீ சிவகாமி சமேத சிதம்பரேஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெற்று 8ம் திகதி தேர்த் திருவிழாவும் 9ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

0 0 0

(நெல்லியடி)

கரவெட்டி முங்கோடை முருகனாலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவிருக்கின்றது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ள இவ்வலங்கார உற்சவத்தில் 8ம் திகதி வேட்டைத் திருவிழாவும், 10ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

0 0 0

(அச்சுவேலி)

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் ரதோற்சவம் நாளை முதலாம் திகதி சனிக்கிழமையும் தீர்த்தோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணி குளவிசுட்டான் வைரவர் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று 30ம் திகதி நடைபெறவுள்ளது.

## ஆலயத்தில் தொண்டர் சேவை

(யாழ்ப்பாணம்)

வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள்கோவில் வருடாந்த மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத் தொண்டர்கள் மேற்படி ஆலயத்தில் நாளை 1ந் தேதி காலை முதல் மாலைவரை தொண்டர் சேவை ஆற்றவுள்ளார்கள்.

இவர்கள், ஆலய உள் வீதிச் சேவைகளுடன் முதலுதவி, உடைமைகள் பாதுகாப்பு நிலையம், கண்காணிப்பு போன்றவற்றிலும் ஈடுபடுவார்கள்.

அத்துடன் முதன்முறையாக சைவசமய நூல் விற்பனை நிலையத்தையும் நடத்தவுள்ளார்கள். இச்சேவைகளுக்கு வேண்டிய சகல வசதிகளையும் மேற்படி ஆலயத் தர்மகர்த்தாச் சபையினர் செய்துள்ளனர்.

தொண்டர் சேவைகள் அனைத்தும் திரு. இ. சுவாமிநாதன் தலைமையில் நடைபெறும். முதலுதவிச் சேவைக்கு செல்வன் தெ. ரதீஸ்வானும், நூல் விற்பனை நிலையத்திற்கு செல்வன் ப. ரகிரூபனும், உடைமைகள் பாதுகாப்பு நிலையத்திற்கு செல்வன் ஜெ. ரஞ்சித்தும் பொறுப்பாக இருப்பார்கள்.

## கோரிக்கை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பல்சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியாஸ்பத்திரியில் பல்சிகிச்சைக்காகச் செல்பவர்கள் வெளி நோயாளர் பிரிவுக்குச் செல்லத் தேவையில்லை. இலக்கம், திகதி பதிவதற்காக சிறிய கொப்பியை வாங்கிக் கொண்டு, நேராக பல்சிகிச்சைப் பிரிவுக்குச் சென்று சிகிச்சை பெறமுடியும்.

## நிவாரணப் பணம் வழங்கப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்கள் இயங்காத பகுதிகளுக்கு நிவாரணப் பணம் வழங்கப்படாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணம் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளபோதிலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் இயங்குவதன் மூலம் தான் இதனை அமுலாக்கமுடியும் என்று யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## கோயில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கூறினார். திரு. த. மனோகரன் மேலும் பேசுகையில்; ''இந்துக் கோயில்களில் திருவிழாக்கள் நடத்தி, அதன் மூலம் ஒற்றுமையையும், நல்லெண்ணத்தையும் வளர்க்க வேண்டும். இந்துக் கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள், கேளிக்கைகளுக்காக நடத்தப்படுவதில்லை என்பதை அனைவரும் உணரவேண்டும்'' என்றார்.

கொழும்புத்துறை சாயி மண்டலத்தைச் சேர்ந்த ஆசிரியர் ந. நகுலேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது; ''இந்து சமய செயற்திட்டம் கல்வி, உடல், உள வளர்ச்சியின் அடிப்படையில் வகுக்கப்படவேண்டும். நல்ல கல்வியும், சீரிய ஒழுக்கமும், திடகாத்திரமான உடல் நலமும், நேர்மையான சிந்தனையும் கொண்ட ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியிலேயே இந்து சமுதாயத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது. இதனை மனதிற் கொண்டு செயற்படவேண்டும்'' என்றார்.

கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் கே. ஸ்ரீகாந்தன் தனது உரையில், ''அனாதையாயுள்ள சிறுவரின் நலன் கருதி சிறுவர் இல்லங்கள் நிறுவி ஆதரவு தரவேண்டும். இந்துப் பொதுமக்கள் அனாதைச் சிறுவர், சிறுமியரின் நல்வாழ்வுக்காகச் செயல்படத் தூண்டக்கூடியதாகப் பிரசாரஞ்செய்து அதன் மூலம் அனாதைச் சிறுவரின் வாழ்வில் ஒளியேற்ற இந்துசமய நிறுவனங்கள் முன்வரவேண்டும்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# $1\frac{1}{2}$ கோடி ரூபா செலவில் யாழ்ப்பாணத்தில் புதிய தபாலகம்!

(யாழ்ப்பரணம்)

யாழ்ப்பாணம் பெரியதபாற் கந்தோர் கட்டிடம் முற்ருக இடிக்கப்பட்டு அதே இடத்தில் புதிய தபாற்கந்தோர் அமைக்கப்படவுள்ளது.

இப்புதிய கட்டிடத்தைக் கட்டுவதற்கு தபாலமைச்சு ஒன்றரைக் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ். கோட்டைக்கு முன்பாகவுள்ள பெரிய தபால் கந்தோர் சுவர்கள் வெடித்துச் காணப்படுவதால் தொடர்ந்து பாவிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பிலிருந்து வந்த கட்டிடநிபுணர்கள் தபால்கந்தோரைப் பார்வையிட விரும்பிய போதிலும் அப்பகுதியில் தரைவெடிகள் இருக்கலாம் என்ற அச்சத்திஞல் பார்வையிடாமல் திரும்பிச்சென்றனர் எனத் தெரியவருகிறது.

---

# தபால் பொதிகள் தினமும் வவுனியா அனுப்பப்படுகிறது

(அரியாலை)

யாழ். மாவட்ட தபால் உயர் அதிகாரி எடுத்த முயற்சியால் தினமும் பயணிகள் செல்லும் பஸ்களில் தபால் பொதிகள் இங்கிருந்து வவுனியாவுக்கு அனுப்பப்படுகின்றன.

இதேபோல் யாழ். தேவியில் வவுனியா வரும் தபால் பொதிகள் அன்றைய தினமே பஸ்கள் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படுகின்றன,

முன்பு கிழமையில் மூன்று நாட்கள் தனியாக ஒரு போக்குவரத்து சபை பஸ்சில் இவை அனுப்பப்பட்டு வந்தன. இதஞல் வெளிஇடங்களுக்கான தபால் சேவைகள் தாமதமாகவே நடைபெற்றுவந்தன.

வாரத்தின் ஒருநாள் வெள்ளிக்கிழமையில் வவுனியாவுக்கு அப்பாற்பட்ட இடங்களுக்கு யாழ், பிரதம தபாலகத்தில் இருந்து தபால் பொதிகள் அனுப்பப்படுவதில்லை என்று தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

# துப்பாக்கிச் சமரில் மருத்துவ உத்தியோகத்தர் பலி

(கொழும்பு)

இலங்கைபாதுகாப்புப்படையினருக்கும் தென்பகுதி தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சமரின்போது தங்காலை மாவட்ட மருத்துவ உத்தியோகஸ்தர் டாக்டர் ரஞ்சன் ஆபேயசேகரா கொல்லப்பட்டார். அவரது மனைவி இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பதம் பற்றிகூறப்படுவதாவது:

கடந்த திங்கட்கிழமை சம்பந்தப்பட்ட மருத்துவ உத்தியோகஸ்தரும், அவரது மனைவியும் காரில் பயணம் செய்துகொண்டிருந்தபோது களுத்துறைப்பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது.

சம்பந்தப்பட்ட கார் அப்போது அந்த மோதலுக்குள் அகப்பட்டுககொண்டது.

துப்பாக்கி ரவைகள்மருத்துவ உந்தியாகஸ்தரைத் தாக்கியதும் கார் பாதையை விட்டு விலகி மின்கம்பம் ஒன்றில் மோதியது,

மருத்துவ உத்தியோகத்தர் துப்பாக்கி காயங்கட்கு இலக்காகி மரணமாஞர். அவரது மனைவி சூட்டுக் காயங்களுடன் ஆபத்தான நிலையில் பாணந்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாரெனக் கூறப்படுகிறது.

---

# பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நெறி ஆரம்ப விழா

(மட்டுவில்)

அறவழி பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சிநெறி ஆரம்ப விழா கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நாளை முதலாம் திகதி நடைபெறும்.

அறவழி குழு தலைவர் திரு. வி. எஸ். துரைராஜா தலைமையில் ஆரம்பமாகும் இந்த விழாவில் யாழ்: பல்கலைக்கழக கல்வித்துறை பீடாதிபதி பேராசிரியர் கா. சிவத்தம்பி பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

இதில் யாழ். கல்வித்திணைக்கள கல்வி அதிகாரி ஜனுப் எஸ். ஏ. ஸீ. எம். இஞநூ. தென்மராட்சி பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. பு, சுந்தரம்பிள்ளை, கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் திரு. ஜே. எஸ். டேவிட் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்கள்.

நவீல்ட் பாடசாலை துணை அதிபர் திரு, கே. கோபாலகிருஷ்ணன் பயிற்சிநெறி அறிமுக உரை நிகழ்த்துவார். 1988ல் சித்தியடைந்தோருக்கான சான்றிதழும் வழங்கப்படும்.

---

# கதிர்காமம் உற்சவம்

[யாழ்ப்பாணம்]]

கதிர்காமம் கந்தன் ஆலய ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் 3-ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

கதிர்காமகந்தனைத் தரிசிக்க வருகின்ற யாத்திரீகர்களுக்காக சகல இடங்களிலிருந்தும் பஸ்சேவைகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ரயில்சேவைகளும் கூடுதலாக நடைபெறும் எனத் தெரியவருகிறது.

ஏராளமான பக்தர்கள் இம்முறை தரிசிக்கவருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பக்தர்களுக்காக சுகாதார சேவைகள், தண்ணீர் வசதிகள் என்பனவற்றை ஏற்படுத்துவதில் அதிகாரிகளும், தொண்டர்களும் ஈடுபட்டுள்ளனர்.

---

# தபால் மூலம் தந்திகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டிலும், அப்பாலுள்ள வவுனியா, திருகோணமலை, மன்ஞர், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கான தபால் சேவைகள் வழமைபோல் நடைபெறுகின்றதென யாழ். தபால் அதிபர் தெரிவிக்கின்ருர்.

தபால் கந்தோர் மூலம் அனுப்பப்படும் தந்திகள் தபால்மூலமே உரியவர்களுக்கு சேர்க்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

---

# பொதிகள் அனுப்பத் தடை

(அரியாலை)

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் சாதாரண பொதிகள் அனுப்புவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து வந்த சுற்று நிருபத்தின் பிரகாரமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

---

# இரு பெண்கள் சூட்டுக்கொலை

(கொழும்பு)

இரு இளம் பெண்கள் இனந்தெரியாதவர்களிஞல் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

எச். எம். நந்தினி [வயது20] ரி. ஜி. சுவர்ணவதி [வயது20[ ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். இவர்கள் இருவரும் கலாபத்த பகுதியைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது.

---

# அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளிக்க வேண்டும்

[புங்குடுதீவு]

பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமுகம்கொடுக்காவிட்டாலும், அங்கு கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் கட்டாயம் சமுகமளிக்க வேண்டும் என்று புங்குடுதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நடந்த புங்குடுதீவு கொத்தணி அமைப்புஅதிபர்களின் விசேட கூட்டத்திற்குத் தலைமை வகித்த கொத்தணி அதிபர் திரு. ஏ. சி. நல்லையா தெரிவித்தார்.

---

# மலர் வெளியிட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு இரண்டாண்டுகள் நிறைவு பெறுவதனை முன்னிட்டு மேற்படி தொழிற்சாலை நிர்வாகத்தினர் தமிழ் மொழியில் இரண்டாவது ஆண்டு மலரை வெளியிடவுள்ளனர்.

நாட்டு நிலைமை காரணமாக இம்மலர் வெளியீடு விழாவாக நடைபெறமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

இம்மலர் நாளை முதலாந் திகதி வெளியிடப்படும், அன்று இத்தொழிற்சாலையில் செயற்கைக்கால் பொருத்தப்பட்டவர்களுக்குப் பண உதவியும் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

---

## வடக்கில் உள்ள

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களிடம் உறவினர்களிடம் நேரில் கையளிக்கும்படி கடிதங்களை கொடுத்தனுப்பியுள்ளனர்.

இதேநேரம் வெளிநாடுகளில் தொழில்புரியும் தமது உறவினர்களின் கடிதங்கள் உரிய காலத்தில் தமக்கு கிடைப்பதில்லையென வடபகுதியில் உள்ளவர்களும் கவலை தெரிவித்ததாக கூறப்படுகிறது.

---

# 'சைவசமயம்போதிக்கும் ஆசிரியர்கள் இந்து சமயத்தவராக இருக்க வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

சைவசமய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்கள் இந்து சமயத்தவர்களாக இருக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

யாழ்ப்பாணம் விவேகானந்த சபையின் செயற்குழுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 3 தீர்மானங்களையும் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் இரு தீர்மானங்கள் வருமாறு:

முன்பு சகல பாடசாலைகளிலும் சமயபாட வகுப்புகள், பாடசாலை நடைபெறும் நாட்களில் தினந்தோறும் தவருது நடைபெற்றுவந்தன. ஆஞல் சமீப காலங்களில் ஒரு வாரத்தில் நடைபெற்றுவந்த 5 சமய பாட வகுப்புகள் வாரத்திற்கு இரண்டு வகுப்புகளாகக் குறைக்கப்பட்டுள்ளமை பெரிதும் வருந்தத்தக்கது. தீயவழிகளில் புலனைச் செலுத்தாமல் அறநெறியில் விழிப்புணர்ச்சியுடன் சரியான பாதைகளில் நல்ல மாணுக்கர்களாக உய்வுறச் செய்வது சமயபாடப் போதனைஒன்றுதான். எனவே எமது இளைய சமுதாயத்தை வழிப்படுத்துவதுற்குச் சமய பாட வகுப்புகள் பாடசாலை நடக்கும் நாட்களில் ஒரு பாடமாகத் தினமும் நடத்தப்படவேண்டும்.

சமயபாட வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்களுக்கு அதற்கேற்றவாறு அவர்கள் உயர்தரப் பயிற்சிகளைப் பெறுவதற்குத் தகுந்த பயிற்சி நெறிகளை அமைத்துக் கொடுப்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படவேண்டும்.

---

# இன்று உற்சவம் ஆரம்பம்

(மட்டுவில்)

சாவகச்சேரி அருள்மிகு சந்திரசேகர வாரிவனநாதேஸ்வர சிவன் தேவஸ்தானம், வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

மகோற்சவ பிரதம சிவாச்சார்யர் கல்வயலூரர் சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள் தலைமையில் ஆரம்பமாகும் இந்த மகோற்சவம் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் 8ம் திகதி இரதோற்சவமும், 9ம் திகதி தீர்த்தோற்சவமும் 10ம் திகதி திருக்கல்யாண விழாவும் நடைபெறும்.

0 0 0

(வடமராட்சி)

தொண்டமாஞறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று காலை விசேஷ அபிஷேகமும் அர்ச்சனையும் நடைபெறவுள்ளது. விநாயகப் பெருமானுக்கு பஞ்சமுக அச்சனையும், ஆறுமுக சுவாமிக்கு சண்முக அர்ச்சனையும் நடைபெறும்.

0 0 0

(அரியாலை)

புங்குடுதீவு வல்லன் திருப்பெருந்துறை நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவம் இன்று 30ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10ம் திகதி பூங்காவனத்துடன் திருவிழா நிறைவுபெறுகிறது.

0 0 0

(ஊர்காவற்றுறை)

திரிப்பொலி சரவணை கட்டுவன் வான் அருள்மிகு ஐயஞர் திருக்கோயிலில் திருவிழா ஆரம்பமாகியுள்ளது.

ஜூலை 2-ம் திகதி பொங்கலுடன் முடிவுறும் இவ்வாலயத்தில் திருவிழாக்காலங்களில் சொற்பொழிவு, கவியரங்கு பட்டிமன்றம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

ஆத்மஜோதி நா. முத்தையா, பண்டிதர் [சோ. தியாகராசா ஆகியோரின் விசேட பொற்பொழிவுகளும் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

காரைநகர் துறைமுகம் மாணுக்கைச் சித்திரகூட சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 8-ம் திகதி ரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

---

# இன்று

(யாழ்ப்பாணம்)

பலாலிஆசிரியகலாசாலைவருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று காலை கோப்பாய் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. என். கனகேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இவ்விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக முன்ஞள் அதிபர் திரு. க. கனகலிங்கமும் அவரது பாரியாரும் கலந்து கொள்கின்றனர். (வி)

---

# புதிய மாதா கோயில்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை துறைமுகத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் அன்னை வேளாங்கண்ணி மாதா கோயில் திறப்புவிழா ஜூலை 2ம் திகதி நடைபெறும்.

பங்குத் தந்தை அருட் திரு கிருபானந்தன் அடிகளால் கொடியேற்றப்பட்டு. ஆராதனையின் பின் அன்னையின் திருச்சொரூபம் நிலைகொள்ளப்படும்.

---

# பிரயாணிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கும், திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குமான இ. போ. பஸ் சேவைகள் சில வாரங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருப்பதஞல் பிரயாணிகள் தமது போக்குவரத்துக்களை மேற்கொள்ள பெரும் கஷ்டப்படுவதாக அறியவருகிறது.

---

# நிதிக்குழு நிறுவ ஏற்பாடு

(கன்ஞகம்)

யாழ். மாவட்டப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய போசனம் சம்பந்தமான கொடும்பனவுகளை கோட்டக் கல்வி அலுவலகங்கள் மூலமாக கையாள நடவடிக்கைகள் மேற்கொள்ப்படுகிறது.

இதற்குவசதியாகஒவ்வொரு பாடசாலையிலும், கோட்டக் கல்வி அலுவலகத்திலும் நிதிக்குழு ஒவ்வொன்றும் அமைக்கப்பட இருக்கின்றது. பாடசாலை மட்டத்திலான நிதிக்குழுவில் அதிபர் இரு சிரேஷ்ட ஆசிரியர்கள் ஆகியோர் இடம்பெறுவர்.

---

# விளையாட்டுப் போட்டி

(சுன்ஞகம்)

ஏழாலை லெனின் சனசமூக நிலையத்தாரின் வருடாந்த விளையாட்டுப் போட்டி ஜூலை மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நிலையத் தலைவர் திரு. சி. சோதிலிங்கம் தலைமையில் நடைபெற இருக்கிறது.

இவ் விளையாட்டுப் போட்டிக்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும் ஏழாலை தெற்கு கிராம சேவையாளர் திரு. இரவீந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொழும்பு - யாழ். தொலைபேசிச் சேவை சீர்குலைவு!

(யாழ்ப்பாணம்)

கொழும்பு-யாழ்ப்பாணம் தொலைபேசிச் சேவை நேற்று முதல் செயலிழந்துள்ளதாக அறியப்படுகிறது.

யாழ். பிரதம தபாலகத்தில் நேற்றுக்காலை கொழும்பிற்கான தொலைபேசிச்சேவை நடைபெற்றபோதிலும், திடீரெனத் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டதால், தொலைபேசி எடுப்பதற்காக காத்திருந்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

கொழும்பிலிருக்கும் ஒருவர் யாழ். பிரதம தபாலகத்திற்கு தொலைபேசிமூலம் பேசக்கூடியதாக இருக்கின்றபோதிலும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு தொலைபேசி எடுக்க முடியாதிருப்பதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## முதலமைச்சர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வார்.

அரசாங்க திணைக்களத்தலைவர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோரைச்சந்தித்து கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ள முதலமைச்சர் அரச திணைக்களங்களின் செயற்பாடுகளையும் நேரில் அவதானிப்பார் எனத் தெரிய வருகிறது.

## கருத்துவெளியிட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதி திரு. பிரேமதாசாவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் தொடர்பாக கருத்துவெளியிட இந்திய அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

இது நட்பு ரீதியான ஒரு கடிதம் என்று மட்டும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுபற்றி இலங்கை தரப்பிலும் எதுவித கருத்தும் வெளியிடப்படவில்லை.

# ஏழாலையின் ஒரு பகுதி சுற்றிவளைப்பு!

(யாழ்ப்பாணம்)

ஏழாலையின் ஒரு பகுதி நேற்றுச் சுற்றிவளைக்கப்பட்டு பலர் முகாமுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

அதிகாலையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் வயது வித்தியாசமின்றிப் பலர் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் சிலர் விடுவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### இளைஞர் சடலம்

துப்பாக்கிச்சூட்டுகாயங்களுடனான சடலம் ஒன்று நேற்று முன்தினம் இரவு தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அலுக்கைச்சந்தியில் நடைபெற்ற சம்பவத்தில் மரணமானவர் அளவெட்டியைச் சேர்ந்த கணேஷ் பழனிக்குமார் (வயது 21) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. மரண விசாரணைகள் நேற்றுமுதல் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றது.

### பெண்ணின் சடலம்

நேற்றுக் காலை வீமன்காமம் சாந்தை சந்திக்கருகாமையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஒரு பெண்ணின் சடலம் காணப்பட்டது.

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவசம்பு

தாவடி தெற்கு காலஞ்சென்ற கந்தையா வள்ளியம்மையின் அருமை மகன் சிவசம்பு கந்தையா (பிரபல வர்த்தகர்) புதன்கிழமை (28-6-89) அன்று காலமாகிவிட்டார். இவர் பார்வதிப்பிள்ளையின் அன்புக்கணவரும். சிவபாக்கியம், காலஞ்சென்ற இராசரத்தினம், சிவசுப்பிரமணியம் (ஆசிரியர் யா/தாவடி இ. த. க. பாடசாலை), கமலாதேவி, இராசலட்சுமி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற சங்கரசிவம்பிள்ளை, நாகராசா (ஆசிரியர் யா/தாவடி இ. த. க. பாடசாலை), நாகேஸ்வரன் (லண்டன்), மனோகரன், திருமதி நாகேஸ்வரி இராசரத்தினம், திருமதி சிவபுஸ்பம் சிவசுப்பிரமணியம் (ஆசிரியை யா/இணுவில் அ. மி. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சரோஜினி, விஜயராணி, வவீந்திரன் (உரிமையாளர் யாழ்ப்பாணம் றேடிங் கொம்பனி பேணிச்சர் பலஸ்). தனலஷ்மி, கலாறஞ்சனி, தயாபரன், கிருபாகரன், ரோகினி, மோகனதாஸ், கஜேந்திரதாஸ், சுறஞ்சனா, முருகதாஸ், சந்திரதாஸ், சூரியதாஸ், குமாரதாஸ், கந்தராஜா, யோகராஜா, இராஜறஞ்சனி, தேவராஜா, ரூஜினி, சிவரூபன், சிவானி, சிவமயூரன், சிவறஞ்சன், சிவதர்ஷினி, ஜெயகணேஷன், பிரியந்தி, ஜெயசதீஷன், ஜெயறஜிஷன், நிரஞ்சன், நிரூபா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள்நேற்று வியாழக்கிழமை (29-6-89) பிற்பகல் 3 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: சி. சிவசுப்பிரமணியம் (மகன்)

பாடசாலை ஒழுங்கை,
தாவடி, கொக்குவில்.

சி-3020

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone 22389. 24126.

# எமது வாழ்க்கை மற்றவர் பயன்பெற அமையவேண்டும் -வணபிதா

(சுன்னாகம்)

கோதுமை மணியானது செத்த பின்னரே மற்றவர்களுக்கு பலன் கொடுக்கிறது. மனித சீவியமும் அவ்வாறானதே, மற்றவர்கள் பலன் கொள்ள எமது வாழ்க்கை அமையவேண்டும். காலஞ்சென்ற வண. எம். தேவதாசன் அடிகளார் தன் வாழ்வின் மூலம் சிறந்த அயலானாகவும், ஊழியனாகவும், சுவிசேஷசகனாகவும் வாழ்ந்து எமக்கு பாடமாக வைத்துச்சென்றுள்ளார்.

இவ்வாறு நவாலி தென்னிந்திய திருச்சபைக்குரு வண. தர்மகுலசிங்கம் அடிகளார் ஏழாலை வடக்குத் திருச்சபை ஆலயத்தில் காலஞ்சென்ற ஏழாலை திருச்சபைகளின் பங்குக்குரு வண. எம். தேவதாசன் அடிகளாரின் அஞ்சலி வைபவத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

பேராயர் அதிவண டி. ஜே. அம்பலவாணர் தலைமையில் இந்த அஞ்சலி வைபவம் நிகழ்ந்தது. குடாநாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த கிறிஸ் தவகுருமார்கள், ஊழியர்கள், கல்விமான்கள் உட்படபொது மக்கள் பலரும் இந்த அஞ்சலிக் கூட்டத்தில் பங்கு பற்றினார்கள்.

வண. தர்மகுலசிங்கம் அடிகளார்தனதுஉரையில் மேலும் கூறியதாவது: சிறப்பான தேவ ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்த வண. தேவதாசன் மார்க்க வித்தியாசம் பாராது சகலரையும் தனது அயலாராக ஏற்றுக்கொண்டு அவர்களின் இன்பதுன்பங்களில் தன்னையும் பங்காளியாக்கிக்கொண்டார் என்றார்.

## சுண்டுக்குளி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இப்பகுதியில் அடிக்கடி துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்பதால் மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர்.

துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்கும் பகுதி உடனடியாக சுற்றிவளைக்கப்பட்டு இளைஞர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்படுவதாகத் தெரிய வருகிறது.

குறிப்பாக மத்தியூஸ்வீதி, குருசோவ்வீதி ஆகிய பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகள் கூடுதலாகக் காணப்படுவதினால் இப்பகுதி பகல் வேளையிலும் வெறிச்சோடிக் காணப்படுகிறது.

இம்மாதத்தில் இப்பகுதியில் இரு இளைஞர்கள் இனந்தெரியாதவர்களால் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

கொய்யாத்தோட்டம், ஈச்சமோட்டை, பாஷையூர் பகுதிகளிலும் அடிக்கடி துப்பாக்கி வேட்டுகள் கேட்பதால் மக்கள் இரவு நேரத்தை மிக அச்சத்துடன் கழிக்கின்றனர்.

## அமைதிப்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜாங்க அமைச்சர் திரு. ஏ. ஜே. ரணசிங்க நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

''அந்நிய நாடு, ஒன்று அது எவ்வளவு பலமுள்ளதாக இருந்தாலும் எமது நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை எம்மால் சகித்துக் கொள்ள முடியாது'' என்றும் திரு. ரணசிங்கா கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது;

'தன்னாதிக்கமுள்ள நாடான எம்மை, எமது பிரச்னைகளை நாமே தீர்த்துக்கொள்ள இடமளிக்கும் வகையில் எமது ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா விடுத்த வேண்டுகோளுக்கமைய அடுத்தமாதம் 29ம் திகதிக்குள் இந்தியா தனது படைகளை வாபஸ்பெற்றுக்கொள்ளவேண்டும்.

''இந்தியாவுக்கு நாம் தொடர்ந்தும் கௌரவமும் மரியாதையும் கொடுத்து வந்துள்ளோம்.

''இந்தியா பலாத்காரமாக இங்கு தங்கியிருப்பதை எம்மால் சகித்துக்கொள்ள முடியாது. அமைதிப்படை இங்கிருந்து வெளியேறியே ஆக வேண்டும். அவ்வாறு செய்ய [illegible] இல்லை.''

## மிருசுவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரு மினி பஸ்கள் அனாதரவான நிலையில் நேற்றுமுன்தினம் காணப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இந்தப் பதினான்கு சடலங்களும் உழவு இயந்திரமூலமாக சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டன.

## முல்லைத்தீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வனாவான். காயமடைந்தவர்களில் ஒருவரான சிலாவத்தை அகதி முகாமைச் சேர்ந்த சின்னத்தம்பி சுமதி (வயது 17] என்ற இளம் பெண் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிச்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (கு)

## வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சன நடமாட்டமும் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

வன்னியில் ஏற்பட்ட இராணுவமோதலில் இறந்தவர்களின் நினைவாகவே வடமராட்சி மக்களால் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாக அறியப்படுறது.

நேற்று முன்தினம் வல்வை, உடுப்பிட்டி, இமையாணன் போன்ற இடங்களில் ஹர்த்தால், வீதிமறிப்பு இடம்பெற்றது.

## கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று மாலையே இத்தபால் பொகுதிகளுடன் யாழ் தபாலக ஊழியர்கள் யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று மாலை இவை வந்து சேர்ந்தால் நாளைக் காலையில் யாழ்ப்பாணத்திற்கான தபால்கள் யாவும் விநியோகிக்கப்படும் என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன,

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு மற்றும் தூரஇடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, வவுனியாவில் தேங்கிக்கிடந்த தபால் பொதிகளும் இன்று கொழும்புக்கு அனுப்பப்படலாம் என்று நம்பப்படுகிறது.

## 'ரக்' மோதி பெட்டிக்கடை சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தட்டாதெருச் சந்தியில் நேற்று இடம்பெற்ற 'டிரக்' விபத்தில் பெட்டிக்கடையொன்று சுக்கு நூறானது. கடையில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

## உருத்திரபுரம்

(1ம் பக்கத் தொடச்சி)

வழமையான கருமங்களும் தடையின்றி நடந்தன.

நேற்றுமுன்தினம் உருத்திரபுரம் பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை இடம் பெற்றது.

## பத்திரிகையாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டுள்ளார்.

பிரதான வீதிவழியாக சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோதே இவ்விபத்து இடம்பெற்றது.

ஐம்பது வயதுடைய இவர், மயக்கமடைந்த நிலையில் காணப்படுகிறார், அவசர சிகிச்சைக்காக இன்று கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு இவரைக் கொண்டு செல்ல ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கொக்குவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தில் உதவி அரசாங்க அதிபரும், அம்மன்கோவில் இளம்பூசகரும், மற்றுமொருவரும் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானது தெரிந்ததே.

இதேநேரத்தில் நேற்றுக் கோண்டாவிலில் ஒரு பகுதியில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல்செய்யப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை ஆறுமணிக்கு மேற்படி பகுதி சுற்றிவளைக்கப்பட்டு பலர் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டனர்.

விசாரணையின்பின் விடுவிக்கப்பட்ட சிலரில் தங்கராசா தனபாலசிங்கம் (வயது 28), தம்பிப்பிள்ளை தவராஜசிங்கம் (வயது 16) ஆகிய இருவரும் பலத்த காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (கு)

## வடக்கு கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் இன்றைய நிலைகுறித்து உத்தியோக பூர்வமான அறிக்கையைத் தாம் எதிர்பார்த்திருப்பதாகவும், வெறுமனே பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை வைத்துக் கொண்டு அவை குறித்துக் கருத்துத் தெரிவிக்கத் தாம் விரும்பவில்லை என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

அமைதிப்படை விலக்கல் தொடர்பாக ஜனாதிபதி விடுத்த கோரிக்கைக்கு இந்தியப்பிரதமர் திரு. காந்தியிடமிருந்து உத்தியோகபூர்வ பதில் நேற்றுமுன்தினமே ஜனாதிபதி பிரேமதாசாவிடம் ஒப்படைக்கப்பட்டது தெரிந்ததே. இந்தப் பதில் கடிதம் தொடர்பான இலங்கையின் கருத்துக்களும் ஜனாதிபதி அனுப்பவுள்ள செய்தியில் இடம்பெறும் என்று நம்பப்படுகிறது,

## அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டிருந்த இளைஞனின் சடலம், கரையூரைச்சேர்ந்த கபிரியல் பாலதாஸ் (வயது 19) என்பவரினது என்று அடையாளம் காணப்பட்டது.

விசாரணை முடிவில் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org